# புறநானூற்றுப் புதையல் – 14

## கல்வி என்னும் மருந்து

கதை: இ.ஜே.சுந்தர்
ஓவியம்: ஷேக்







அமைச்சர்: கற்பிக்கும் சிறந்த ஆசிரியர்கள் நமக்குத் தேவை. அதற்கு என்ன செய்யலாம்?
நெடுஞ்செழியன்: கற்பிக்கும் ஆசிரியர் உயர்த்தப்பட வேண்டும். மதிக்கப்பட வேண்டும். அவருக்குத் தேவையான பொருளுதவி வழங்கவேண்டும். இதற்கு அரசு தரப்பிலும் உதவுவேன்.


அமைச்சர்: கற்கும் முயற்சி சிலருக்குக் கசக்கிறதே.
நெடுஞ்செழியன்: கற்கும்போது சோர்வு வரும். இழப்பும் வருத்தமும் கூட வரலாம். முயற்சியைக் கைவிடாது கற்கவேண்டும்.
அமைச்சர்: கல்வியில் சிறந்த நாடாக நம் நாடு உருவாகுமா?
நெடுஞ்செழியன்: உறுதியாக உருவாக்குவோம், 'கற்றல் நன்றே' என்ற கருத்தை மக்களிடையே தீவிரமாகப் பரப்புவோம்.
4


அமைச்சர்: நான்கு வகையான குலமுறையில் அனைவரும் கற்க வருவார்களா?
நெடுஞ்செழியன்: கல்வி கற்க யாருக்கும் இங்கு தடையில்லையே! கல்வியே குலவேறுபாட்டை நீக்கும் மருந்து.
அமைச்சர்: எப்படிச் சொல்கிறீர்கள்?
5


நெடுஞ்செழியன்: கீழ்க்குலத்தவன் ஒருவன் கற்றால் மேற்குலத்தவனும் அவனுக்கு ஆட்படுவான். கீழானவன் மேலேற கல்வியே படிக்கட்டு!
புலவர்: ஆரியப் படையினரை மட்டுமன்றி ஆரியக் கருத்தினையும் கடந்துவிட்டீர்கள்.
6


நெடுஞ்செழியன்: நீதி அனைவருக்கும் ஒன்றாக வேண்டும். இந்த நீதி குலைந்தால் நான் உயிரையும் விடுவேன்.
7
நெடுஞ்செழியன் கோவலனுக்குத் தவறாகத் தீர்ப்பிட்டு நீதி வழுவினான். உண்மை அறிந்தபின் தன் தவறுக்காக உயிரையும் நீத்தான்.
வளைந்த செங்கோலை அவன் உயிர் நிமிர்த்தியது. குலவேறுபாட்டை அவன் கல்விக்கொள்கை தகர்த்தது. கவிஞனாக விளங்கிய இக்காவலனின் பாடல்:
8
உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும்,
பிற்றைநிலை முனியாது, கற்றல் நன்றே!
பிறப்பு ஓர் அன்ன உடன்வயிற்று உள்ளும்,
சிறப்பின் பாலால், தாயும் மனம் திரியும்;
ஒரு குடிப் பிறந்த பல்லோ ருள்ளும்,
'மூத்தோன் வருக' என்னாது, அவருள்
அறிவுடை யோன் ஆறு அரசும் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்,
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்,
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே.
- ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன்
(புறம்:183)
9